**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 37/2011 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW. 3 |
| | Defence |
| | Court |
| Name | ஜெயச்சந்திரன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 15th day of November 2024.

Signature of Witness

Name of the INterpreter: K.Thankotti, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 15th day of November 2024.

Signature of Interpreter

## <u>முதல் விசாரணை</u>

நான் கடந்த 2015 ம் ஆண்டு 8ம் மாதம் காஞ்சிபுரம் மாவட்டம் மனித உரிமை மற்றும் சமூக நீதி பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று பணி ஓய்வு பெற்றேன். கடந்த 2002 ம்ஆண்டு மது விலக்கு மத்திய புலனாய்வு பிரிவில் தலை காவலராக பணியில் இருந்தபோது 07.08.2022 ம் அன்று இரவு சுமார் 9.00 மணியளவில் காஞ்சிபுரம் டு உத்திரமேரு்ர் செல்லும் சாலையில் ஆர்பாக்கம் கூட்ரோடு அருகில் வாகன தனிகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது நானும் என்னுடன் உதவி ஆய்வாளர் வீரகாந்தி மற்றும் தலைமை காவல் ஆகியோர்கள் ஈடுபட்டு இருந்தபோது உத்திரமேரூர் டு கா்ஞ்சிபுரம் நோக்கி வந்த டாட்டா 407 பதிவெண் டிஎன் 25 Z பதிவெண் ஞாபகம் இல்லை. அவ்வாகனத்தை ஆய்வாளர் உத்தரவின் பேரில் சோதனை செய்ததில் அவ்வாகனத்ரதில் 40 எண்கள் 35 லிட்டர் கொள்ளவு கொண்ட வெள்ளை நிற கேன் இருந்தது. அக்கேன்களை ஒவ்வென்றாக ஆய்வு செய்த போது 35 வெள்ளை நிற கேன்களில் எதுவும் இல்லை. 5 வெள்ளை நிற கேன்களில் திரவம் இருப்பதாக தெரியவந்தது. ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் அக்கேன்களை திறந்து பார்த்த போது விஷ நெடியுடன் நச்சுத்தன்மையுடைய எரிசாராயம் இருப்பது தெரியவந்தது. அந்த 5 கேன்களில் இருந்து தலா 500 எம்எல் வீதம் 10 பாட்டில்கள் பகுபப்பாய்விற்காக மாதிரி சேகரித்து சம்பவ இடத்திலேயே அந்த 10 பாட்டில்களிலும் சீல்வைக்கப்பட்டது. ஏனைய எரிசாராயத்தை ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் படி

சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது. அந்த வாகனத்தை ஒட்டிவந்த நபர் ஆஜர் எதிரி தசரதன் மற்றும் ஆஜர் எதிரி உமாபதி அவர்களும் நீதிமன்றத்தில் உள்ளார்கள். அன்றைய தேதியிலேயே ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் வழக்கு சம்பந்தமாக சொத்துக்களில் கைப்பற்றிய மகசரில் நான் 2வது சாட்சியாக கையெழுத்து அந்த சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகளில் வழக்கறிஞர் ஆஜர் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/– K.S.அருண்சபாபதி,
முதன்மை நீதிபதி
காஞ்சிபுரம்.